
உங்களுக்கு
வல்லமை
வேண்டுமானால்,
தேவனுக்கு முன்பாக
உங்களை
எவ்வளவு தூரம்
தாழ்த்த முடியும்
என்பதை
பாருங்கள்

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## மத்தேயு 23:12

தன்னை உயர்த்துகிறவன்
தாழ்த்தப்படுவான்,
தன்னைத் தாழ்த்துகிறவன்
உயர்த்தப்படுவான்.



## செய்தி: **உன்னைத் தாழ்த்து**, Jeffersonville, Indiana, USA, 63-07-14E

31. உங்களுக்குத் தெரியுமா, ஜனங்கள் வல்லமையைப் பெற விரும்புகின்றனர், ஆனால் உண்மையில் வல்லமை என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரிவதில்லை. பாருங்கள், அதனுடன் எது சம்பந்தப்பட்டுள்ளது என்பதை அவர்கள் அறிவதில்லை.

**மேலே செல்லும் வழி எப்பொழுதுமே கீழே உள்ளது.**

**உங்களுக்கு வல்லமை வேண்டுமானால், தேவனுக்கு முன்பாக உங்களை எவ்வளவு தூரம் தாழ்த்த முடியும் என்பதை பாருங்கள்.**

**உலகப் பிரகாரமான உங்கள் சிந்தனை அனைத்தையும் அறவே அகற்றி, உங்களை தேவனுக்கு**

முன்பாக தாழ்த்துங்கள். அப்பொழுது, கட்டிடத்தின் எல்லாவிடங்களிலும் ஒழி மிகுந்த சத்தமிடும் மனிதனைக் காட்டிலும் உங்களுக்கு அதிக வல்லமை இருக்கும்.

ஏனெனில் உங்களையே நீங்கள் அடக்கி ஆண்டு, கிறிஸ்துவுக்கு உங்களை அர்ப்பணித்து, அவருக்கு முன்பாக உங்களை தாழ்த்த உங்களால் முடிகிறது. அதுவே உண்மையான வல்லமை.

அகந்தையில்லாத, உண்மையில் தாழ்மையுள்ள, இனிமையுள்ள சபையை எனக்குக் காண்பியுங்கள். அப்பொழுது தேவனுடைய வல்லமையையும் ஆதரவையும் கொண்ட சபையை உங்களுக்குக் காண்பிப்பேன். அது உண்மை. அது தான் அதற்கு அவசியம், தாழ்மை.

**நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்தி, நமது மூலம் தேவன் கிரியை செய்ய அவரை அனுமதித்தல். நாம் மிகுந்த சத்தமிட வேண்டிய அவசியமில்லை.**

32. என் தந்தை கூறினது போன்று, அவர் வண்டியை வயல் வழியாக கொண்டு சென்ற போது, ஒவ்வொரு முறை அவர் மேடான பாகத்தின் மேல் மோதினபோது, வண்டி பயங்கரமாக குலுங்கினது. ஆனால் திரும்பி வரும் வழியில் அவர் அதே மேடான பாகத்தின் மேல் மோதின போது, வண்டி குலுங்கி சத்தமிடவில்லை. ஏனெனில் அது அநேக நன்மையான பொருட்களால் நிறைந்திருந்தது.

அது முற்றிலும் உண்மையென்று நான் கருதுகிறேன். **பாருங்கள், தேவனுடைய நன்மையான காரியங்களால் நாம் நிறைந்திருக்கும் போது, ஆவியின் கனி நமது மூலம் வெளிப்படும்.**

1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் பவுல், "என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" என்று குறிப்பிடுகிறான். பாருங்கள், அதை நாம் செய்ய வேண்டும்.

33. எல்லாவற்றிற்கும் மேலாக, நமது ஆத்துமாக்களுக்கு நாம் தனிப்பட்ட விதத்தில் தேவனுக்கு முன்பாக உத்திரவாதமுள்ளவர்களாய் இருக்கின்றோம்.

தன்னைத் தாழ்த்துகிற
எந்த மனிதனையும்
தேவன் உயர்த்துகிறார்
என்பது நான்
கண்டறிந்த உண்மை.

பாருங்கள், அது நீங்கள் பரலோகத்துக்கு செல்லுதல், நான் போகிறேன், அல்லது அவர் போகிறார் என்றல்ல. நீங்கள் போகின்றீர்கள், பாருங்கள், நீங்கள் முதலாவதாக.

இதற்கு நீங்கள் கவனம் செலுத்தி, கர்த்தருக்கு முன்பாக இனிமையாக வரவேண்டியவர்களாயிருக்கிறீர்கள்.

**தன்னைத் தாழ்த்துகிற எந்த மனிதனையும் தேவன் உயர்த்துகிறார் என்பது நான் கண்டறிந்த உண்மை.**

**தனக்கு எல்லாம் தெரியும் என்று மார்பை உந்திக்கொண்டு நடக்கும் மனிதனிடம் நீங்கள் ஒன்றும் கூற முடியாது. அவன் அகந்தையுள்ளவன். அவன் எதையும் அடைவதில்லை.**

**ஆனால் தன்னைத் தாழ்த்தி இனிமையாய் நடக்கும் மனிதனை எடுத்துக் கொள்ளுங்கள்.**

34. ஒரு சபையை உண்டாக்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனிடம் அன்றொரு நாள் நான் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் ஒரு ஸ்தாபனத்திலிருந்து வெளி வந்தவர்கள். அது சகோதரன் போஸ்.

அவர்கள் நீண்ட காலமாக அந்த மகத்தான சபையில் இருந்தனர். கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்து வந்தார். அதன் பிறகு அதிலிருந்த மக்கள் மற்றவர்களைப் போல் மெருகேற்றப்பட்டு, அதை ஒரு ஸ்தாபனமாக்க முனைந்தனர். அவர்கள் அப்படி செய்த போது... இந்த தாழ்மையுள்ள கிறிஸ்தவர்கள் அதை விரும்பவில்லை. அவர்களுடைய வாழ்நாள் முழுவதும், அதற்கு விரோதமாக அவர்கள் கற்பிக்கப்பட்டு வந்தனர். எனவே அவர்கள் வெளிநடந்தனர்.

இப்பொழுது அவர்களுக்கு ஒரு குழு உள்ளது. கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்து, அவர்கள் மறுபடியும் நான்கு அல்லது ஐந்தாயிரம் பேர்களை கொள்ளும் ஒரு இடத்தில் கூடுகின்றனர்.

35. அன்றொரு நாள் அவர்கள் என் சபை அலுவலகத்திற்கு வந்திருந்தனர். அவர்களுடைய தலைவர்களில் ஒருவரான சகோ. கார்ல்சனும் மற்றவர்களும் "சகோ. பிரன்ஹாமே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டனர்.

நான், "**மற்ற ஸ்தாபனங்களில் நன்மதிப்பு பெறாத ஒரு நல்ல, உத்தமமான, இனிமையான, ஜீவனை வாழ்ந்து காட்டும் சகோதரனை உங்கள் மேய்ப்பனாக தெரிந்து கொள்ளுங்கள், தேவன் மற்றவைகளைப் பார்த்துக் கொள்வார்**" என்றேன்.

பாருங்கள், நான், "**ஆடுகளை போஷிக்கும் ஒரு நல்ல மேய்ப்பனை, எல்லாவற்றிலும் தாழ்மையாயிருப்பவரை தெரிந்த கொள்ளுங்கள். தேவன் மற்றவைகளை கவனித்துக் கொள்வார்.**

எல்லாம் தெரிந்து பெரிய மனிதன் வந்து, இது இப்படியிருக்க வேண்டும் என்று சொல்லி சீர்படுத்துவதல்ல. அது ஒருபோதும் கிரியை செய்யாது. இப்படிப்பட்ட தாழ்மையுள்ள ஒருவரையே தெரிந்துகொள்ள வேண்டும்" என்றேன்.

அது தான், சபையிலுள்ள ஒவ்வொரு பாகமும் இசைவாக இயங்கவேண்டும். நீங்கள் உங்கள் பாகத்தை வகிக்க வேண்டும், எனவே நாம் எந்த நேரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைக் காண்கிறோம். **நாம் நினைப்பதைக் காட்டிலும் அருகாமையில் இருக்கக்கூடும்.**

★★★★★